**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 61** **நாள்: 05.04.2026**

**சென்னை மாவட்டத்தில் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரவள்ளூர் காவல் நிலையம் அருகில் வாக்காளர்கள் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா" எனும் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி பல்வேறு வகைகளில் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரவள்ளூர் காவல் நிலையம் அருகிலிருந்து வாக்காளர்கள் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் மூலம் இளம் வாக்காளர்கள் விழிப்புணர்வுப் பதாகைகள் ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தொடர்ந்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த சுயபுகைப்பட பதாகை (Selfie Point) முன் வாக்காளர்கள் தன் புகைப்படம் எடுத்து சென்னை மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்கினை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

**"தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா"**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**